# அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

## “சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்”

# ஆய்வடங்கல்

## ISC
## 2016

பெப்ரவரி - 12,13,14 - 2016
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2016
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

திரு. ப. கணேசலிங்கம்

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புக்கூறல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# தேவாரத் தூதுப்பாடல்கள் புலப்படுத்தும் இறையான்ம உறவு

தி.செல்வமனோகரன்

**ஆய்வுச் சுருக்கம்**

*சைவ சமய பக்திப் பனுவல்களுள் அடங்கன்முறை எனச் சிறப்பிக்கப்படும் தேவாரங்களுக்குத் தனியிடமுண்டு. சைவத்தின் சமய, சமூக, தத்துவ வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் காரணமாகவும் தமிழ் நாட்டில் அவைதீக நெறிகளிடமிருந்து மக்களையும் மன்னர்களையும் சைவத்தின் பாற்படுத்தி மீட்டுருவாக்கம் செய்த பக்தியியக்கத்தின் குரலாகவும் தேவாரங்கள் வர்ணிக்கப்படுகின்றன. தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் / சிற்றிலக்கியங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று தூதிலக்கியமாகும். ஆரம்பகாலத்தில் புறப்பண்பியலுக்குரியதாக எடுத்தாளப்பட்டுப் பின் தமிழிலக்கியங்களில் முக்கியமான அகவிலக்கிய வடிவமாகத் "தூது" எடுத்தாளப்பட்டுள்ளது. அந்த வகையில் பக்தி இலக்கிய மரபில் தூது வடிவத்தை முதலில் கையாண்டவர்களாகத் தேவார முதலிகள் சுட்டப்படுகின்றனர். உலகியல் சார்ந்திருந்த அகமரபை தெய்வீக அகமரபாக்கியதைப் போல தூதிலக்கியமும் தெய்வீகமயமாக்கப்பட்டது. இறைபெருமை பேசுவதாகக் கட்டமைக்கப்பட்டது. இப்பதிகங்கள் தூது வடிவத்தினூடு எவ்வாறு இறையான்ம உறவை வெளிப்படுத்துகின்றன என்பதை சைவசித்தாந்த கோட்பாட்டியற்றளத்தில் நின்று இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள் :** தேவாரம், தூது, இறைவன், ஆன்மா, சைவசித்தாந்தம், முப்பொருட்கள்.

**அறிமுகம்**

ஆரம்ப காலத் தமிழிலக்கியங்கள், இயற்கையோடு ஒட்டிய வாழ்வின் நின்றும் தோன்றியவை என்றும் அவை அகம், புறம் என்பவற்றைத் தம் கருப்பொருட்களாகக் கொண்டவை என்றும் பொதுவில் சுட்டப் படுகின்றன.[1] அதேவேளை உலகியற் துய்ப்பில் முழுமையாக ஈடுபட்ட தமிழர்கள் தமக்கான தனித்துவமான சமூக, சமய, கலை, பண்பாட்டடையாளங்களை - தம்மைத் தாமே ஆண்டதோடு அரசியல், பொருளாதார, சமூக அசைவியக்க செல்நெறியில் சிறப்புற முன்னேறிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறான இயற்கையோடு ஒட்டிய வாழ்விற்கு அப்பால் சமண பௌத்த செல்வாக்கு, களப்பிரர் வருகை, ஆட்சி மாற்றம், வாழ்வியற் தோல்விகள், மரணம் போன்றவற்றின் வழி, சிந்தனை அல்லது கருத்தியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. நிலையாமை, துறவு, அறம் போன்றவற்றை வற்புறுத்திய சமண பௌத்த சமயங்களின் செல்வாக்குகள் மிகுந்தன. காதல்வாழ்வும் இல்லறமும் கீழ்நிலை பெற, துறவே முதன்மைப்படுத்தப்பட்டது. அறநூல்களே மிகுதியும் தோன்றின. குறித்த காலகட்டத்தின் பின் மக்கள் மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. அருளாளர்களும் தோன்றினர், கலைநயம் மிகு பக்திப் பனுவல்களும் தோன்றின. பற்றுக்கோடற்று நின்ற தமிழக மக்களை இறைவன் ஒருவன் உளன், அவனைப் பற்றுங்கள், துன்பங்கள் யாவும் மறைந்து இன்பமே எந்நாளும் என எடுத்துரைத்தனர். பேரின்பத்திற்கு காதலும் இல்வாழ்வும் தடையாகா என்பதோடு அவை

ஆசிரியர், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். chelvamanoharan@gmail.com

நல்வழி காட்டும் என்றனர். பக்தி இலக்கியத்தின் வழி சைவம் தழைத்தோங்கிது. மனித வாழ்வும் அர்த்தமுடையதாயிற்று.

**ஆய்வின் நோக்கம்.**

- அகத்துறை மரபில் தூது எனும் இலக்கிய வடிவம் தேவார முதலிகளால் பயன் படுத்தப்பட்ட முறை, அதன் பயன்பாடு என்பவற்றை ஆராய்தல்.
- இத்தூதுப் பிரபந்தங்களில் புலப்படுத் தப்படும் காதலை - காதலுணர்வை அக மரபின் வழி புரிந்து கொள்ளுதலும் தத்துவார்த்தத்தளத்தில் அதன் இயங்கு நிலையை எடுத்துரைத்தலும்.
- சைவசித்தாந்த சாஸ்திரம் கூறும் இறை ஆன்ம உறவைத் தோத்திர ங்களின் வழி ஆராய்தல்.

**ஆய்வு வரையறை**

தேவாரங்களும் அதன் அகத்துறைச் செய்யுட்களும் இங்கு எடுத்தாளப்படினும் தூதுப் பாடல்களே முன்னிறுத்தப்படுகின்றன. அத்தூதிலக்கியங்களினூடே இறையான்ம உறவு ஆராயப்படுகின்றது. சைவசித்தாந்தத் தளத்தினின்றே இவ்வாய்வு முன்னெடுக்கப் படுகின்றது.

**இலக்கிய முன்னோடிகள்**

தேவாரங்களை - தேவார தூதுப்பாடல் களை முதன்மையாகக் கொண்டு மெய்கண்ட சாத்திரங்கள், சிவநெறிப்பிரகாசம் என்பனவும் மூல நூல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படித்தலைப்போடு ஒட்டிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பேராசியர் நா. ஞானகுமாரனின் "சமய அனுபவத்தில் திருஞானசம்பந்தரது தூதின் நுட்பம்" (மூவர் தமிழும் சைவநெறியும் -2014, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு, இலங்கை) எனும் கட்டுரை ஒத்த தன்மையுடையதெனினும் சமய அனுபவத் தளத்தில் சம்பந்தரின் தூதுப் பாடல்களை மட்டும் அணுகியுள்ளது. அதேபோல கு.சுந்தரமூர்த்தி, *1969,* திருஞானசம்பந்தர், வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும் ம.சா.அறிவுடைநம்பி, *1986,* திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கை, கு.சுந்தரமூர்த்தி, *1978,* சுந்தரர் வரலாற்றா ராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும் எனும் நூல்களில் தூது பற்றிய சிறுகுறிப்புக்கள் உள்ளன. அவை ஆய்வுகளாக முன்னெடுக்கப் படவில்லை என்பது இங்கு சுட்டத்தக்கது. அந்த வகையில் இக்கட்டுரை சைவசித்தாந்த தத்துவத் தளத்தில் தேவார தூதிலக்கியங்கள் புலப்படுத்தும் இறையான்ம உறவைத் தனித்து ஆராய்கிறது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு மூலநூல்களில் வழிநின்று தத்துவத்தளத்தில் முன்னெடுக்கப்படுவதனால் வரலாற்று, விவரண ஆய்வு முறைகளும் தேவையான இடங்களில் ஒப்பீட்டாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.

**அகத்துறை**

சங்க கால வாழ்வில் உலகியலின்பமே மேலோங்கியது. மக்களின் வாழ்வில் புறத் திணை இன்றியமையாததாய் விளங்கினும் அதுவும் பல சமயங்களில் அகத்தின் பாற் பட்டே வெளிப்பட்டது.

"சங்கவிலக்கியம் 1862 அகப்பாடல் உடைய காதலிலக்கியம். ஒவ்வொரு பாடலிலும் ஆண் பெண் உள்ளங்கள் உள்ளன. இப்பாடல்களைக் கற்பவர் 3724 காதல் உள்ளங்களைப் பற்றிய அறிவு பெறுவர்."[2]

எனக்கூறப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது. புறப்பாடல்களை விட அகப் பாடல்களே மிகுந்திருந்தமையையும் அறியமுடிகிறது. அகம் என்பது உள்ளத்தில் நிகழ்வது. உணர்வின் வழி அறிய முடியுமே அன்றி இஃது இவ்வாறு

எனப் புறத்தே எடுத்துரைக்க முடியாது மனதினால் அறியும் சிறப்புப் பொருந்தியது என எடுத்தாளப்படுகின்றது.

ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூடலின் வழி ஒருவர்க்கொருவர் தத்தமக்கு இவ்வாறு இருந்தது எனக்கூறமுடியாததாகவும், உள்ளத்துணர்வால் என்றும் நுகர்ந்து இன்புறும் ஒன்றாக இருப்பதும் அகம் எனப் படுகின்றது.[3] காதலின்பத்தை வெளிப் படுத்தும் ஆகுபெயராக ஆய்வாளர் சிலர் இதனைச் சுட்டுகின்றனர்.[4] அகம், காதல், காமம் போன்றன அக்கால இலக்கியங்களில் ஒத்த பொருட் சொற்களாகவே பெரிதும் எடுத்தாளப்பட்டுள்ளன.

காதல் வாழ்வின் அம்சங்களைத் தொல் காப்பியம் முதல், கரு, உரி எனும் முப் பிரிப்புக்களால் சுட்டி நிற்கின்றது. ஐவகை நிலங்களிலும் காணப்பட்ட காதல் சார்ந்த பண்புகளான களவியல், பிரிதல், காத்திருத்தல், ஊடல், ஏங்குதல், புணர்தல், காதற் துயர் என்பன உரிப் பொருள்களாகும். அவர்களின் வாழ்வியற் சூழலை எடுத்துக்காட்டும் மரங்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் தொழில்கள் போன்றன கருப் பொருட்களாகச் சுட்டப்பட்டன. காதல்வாழ்வின் பின்னணியாக விளங்கக் கூடிய நிலம், காலம் என்பன முதற் பொருட்களாகச் சுட்டப்பட்டன. இவ்வாறாக இயற்கையோடு ஒட்டியிருப்பினும் அக்காலக் காதற் பாடல்கள் கற்பனை சார்ந்தவையே என எடுத்தாளப் படுகின்றன.[5]

**தேவாரங்களில் அகம்**

சாதாரண மனித வாழ்வில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையில் ஏற்படுகின்ற அன்பு – அன்பின் பிணைப்பு அதன் ஆழ்தன்மை என்பவற்றை பக்தியாளர்கள் தத்தம் கடவுளர் மீது ஏற்றியுரைக்க முற்பட்டனர். அதன் வழி மானிடக் காதல் தெய்வீகக் காதலாயிற்று. நாயகனுக்கும் நாயகிக்கும் இடையில் ஏற்படுகின்ற காதலுணர்வு வழி வரும் கூடல், ஊடல், பிரிவு, காதற்றுயர், வருந்துதல், ஏங்குதல், கண்ணீர் விடுதல், அழுகை போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் நாயக நாயகி பாவத்தினூடாக இறையான்ம உறவாக வெளிப்படத் தொடங்கின. இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவனை செய்து இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவின் ஞானநிலையை இப்பாடல்கள் புலப்படுத்தி நிற்கின்றன.

தாங்கள் அனுபவித்த அகம்சார் இறையனுபவத்தை பக்தியாளர்கள் சமய வனுபவமாக வெளிப்படுத்திய பாடல் களாக இவ்வகப்பாடல்களை நாம் இனங் காணமுடிகிறது. இறைவனை அப்பன், அம்மை, குரு, காதலன் எனப் பல்வேறுபட்ட உறவு முறைகளின் வழி புரிந்து கொள்ளவும் புரிந்து கொண்டதை வெளிப்படுத்தவும் இவர்கள் முற்பட்டனர். ஆயினும் நாயக நாயகி பாவம் நிறைந்த அகப்பாடல்களே இறையான்ம உறவைத் தெளிவுற எடுத்துரைக்க முற்பட்டன.

இறைவன் பதிப்பொருள் யாவும் கடந்த, யாவும் அறிந்த, ஆதியந்தமில்லாத, சுட்டியுணர முடியாத சொரூப இலக்கணத்தினன் பௌதிக வதீத வஸ்து. ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுச் சற்றுக்கீழ் இறங்கிவந்த நிலையே தடத்த இலக்கணம், இறைவன் உருவ, அருவ, அருவுருவத் திருமேனிகளாலான நிலை யிது. பக்தியாளர் தத்தம் பக்தித்திறத்தால் அவனை இறுகப்பற்றி மேனிலையடைய முற்படுவர். அவ்வாறு இறைவனைப் பற்றிப் பிடித்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தம் இறையன்பினை – அனுபவத்தினை வெளிப்படுத்திய – புற நிலையில் அனைவரும் கற்றுணரத்தக்க வகையில் எடுத்துரைத்த பாடல்களே

தேவாரங்களாகும். தம் பதியான சிவபெருமானின் மீது அவர்கள் கொண்ட காமம் சிவகாமமாக வெளிப்படுத்தப்பட்டது.[6] கடவுள் மீது மானிடப் பெண்கள் நயந்த - தம்மைப் பெண்களாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு பாடிய அப்பாடல்களைத் தேவார அகப்பாடல்களாகக் கருதலாம்.

"காமப் பகுதி கடவுளும் வரையார் புலவர்
ஏனோர் பாங்கினும் என்மனார்"[7]

எனும் தொல்காப்பிய வரிகள் இங்கு மனங்கொள்ளத்தக்கவையாகின்றன.

தமது அன்பின் அனுபவத்தை, இறைவனை நாடும் அகவெளிப்பாட்டை, துடிப்பை தேவார முதலிகள் தம்பாடல்களில் புலப்படுத்தியுள்ளனர். உலகியற்றளத்தில் வெளிப்படுத்தப்பட்ட இம்மரபை இறையுணர்வுசார்ந்து தெய்வீகத்தளத்தில் "பெண்ணில் நல்லாளொடு இருக்கும் சிவனைக்" காதல் கொள்ளும் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சூழல்**

சமண பௌத்த செல்வாக்கிற்கு உட்பட்டுத் தமிழக மக்கள் அறத்தின் பாற்பட்டனர். சங்ககால இல்வாழ்வின் தோல்வி அவர்களைச் சமண பௌத்தம் வலியுறுத்திய துறவு வாழ்க்கையின் பாற்படுத்தியது; வினை முதன்மை பெற்றது, யாவையும் சூனியம் என எடுத்துரைக்கப்பட்டது, ஆரம்பத்தில் தமிழக மக்களுக்கு இவை விருப்பத்திற்குரியவையாக அமைந்தபோதும் காலப்போக்கில் இவை பற்றுக் கோடற்ற வாழ்வியலையே தந்தன என எண்ணத்தலைப்பட்டனர். தமது துன்பத்தைச் சொல்லி ஆறுதலடையவும் தமது கீழ்மையான துன்ப நிலையிலிருந்து மீட்டெடுப்பவர் யாரும் இல்லையே எனவும் அங்கலாய்க்கும் நிலைக்கும் தள்ளப்பட்டனர். அந்நிலையில் தான் இயற்கையழகை இறைரூபமாகவும் இறைவன் ஒருவன் உளன் அவன் மேலானவன் என்றும் காரைக்காலம்மையார் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றைத் தமிழக மக்களுக்கு ஏற்படுத்தினார். இதன் வழி வந்த ஞானசம்பந்தர், "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" என நம்பிக்கையூட்டி எல்லாம் வல்லவர் இறைவன் அவர் பெண்ணில் நல்லளொடு வீற்றிருக்கிறார் என இல்லற வாழ்வின் சிறப்பைக் கூறி உலகியலையும் ஆன்மீக வாழ்வையும் இணைத்தார். அதேபோல ஏனைய நாயன்மார்களது வாழ்வும் வாக்கும் ஒழுக்கத்தின் பாற்பட்ட உலகியல் வாழ்வு தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. இதன் வழியிற்றான் உலகியல் சார்ந்த அகப்பாடல்கள் தெய்வீக அகப் பாடல்களாக மாற்றமுற்றன.

அந்த வகையில் திருஞானசம்பந்தர் பாடல்களில் 14 பதிகங்களும் ஒரு தனிப் பாடலும் அகப்பாடல்களாக அமைந்துள்ளன.[8] அப்பர் பாடல்களில் 11 பதிகங்களும்[9] சுந்தரர் பாடல்களில், இருபதிகங்களும், ஒரு தனிப்பாடலும்[10] அகத்துறை சார்ந்து பாடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தூதிலக்கியம்**

ஒருவரிடம் ஒரு செய்தியைத் தெரிவிக்க, பொருள் பெற்று வர, ஒரு செயலைத் திறம்பட ஆற்ற, மற்றவரோடு தொடர்பு கொள்ளப் பயன்படுவது தூது ஆகும். இது தமிழில் புறம் சார்ந்து எழுந்ததாகக் கூறப்படும். ஒரு அரசர் பிறிதொரு அரசரிடம் நட்புப் பாராட்டியோ, உதவி வேண்டியோ, கப்பம் வேண்டியோ, யுத்தம் - சமாதானம் சார்ந்தோ தூது அனுப்புவர். தமிழிலக்கியத்தில் அகம் சார்ந்து, தலைவன் - தலைவிக்கு இடையிலான காதல் மலர்ச்சியின் கருத்துப் பரிமாறலாக – காதல் வெளிப்பாடாக தூது அனுப்பப்படுவதை அவதானிக்கமுடிகிறது.

சங்க இலக்கியத்தில் "காமம் மிக்க கழிபடர் கிளவி"யாக அமைந்திருப்பதைக் காணலாம்.

அதாவது தான் கொண்ட காதல் உணர்வினால் - செறிந்த காதல் மிக்கதனால் - பிரிவுத் துயரினால் தமது மிக்க துன்பம் புலப்படும் மனோநிலையை அஃறிணைப் பொருட்களிடம் கூறித் தூதாக அனுப்புவர். இவ்வஃறிணைப் பொருட்கள் காதல் கொண்டவரிடம் தம் வாய்மொழியை – துன்பத்தைக் தெரிவித்து அவர் மொழியை – பதிலை அறிந்துவராதென அறிந்தும் அவ்வாறு செய்வது அவரின் காதல் மிகுதியாலேயே ஆகும். இதனை,

"சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் தொழிற்படுத் தடக்கியும்[11]

எனும் தொல்காப்பிய வரிகளின் வழியும்

"கேட்குக போலவும் கிளக்குக போலவும்
இயங்குக போலவும் இயற்றுக போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப்படுமே[12]

எனும் நன்னூல் வரிகளின் வழியும் இதனை அறிய முடிகிறது. ஆக, அத்தூது காதலர்க்கு அகவுயிர்ப்பாய் அமைகிறது.

இக்காதற்றூதில் தூதுப் பொருட்களாக அமைபவை எவையெனப் பின்வரும் பாடலால் அறியலாம்.

"இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை பயம்
பெறுமே கம்பூவை பாங்கி – நயந்தகுயில்
பேதை நெஞ் சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை."[13]

இவற்றைவிட கால வர்த்தமானத்திற்கு ஏற்ப புலவர்கள் தாமரை, நெல், துகில், அன்றில், குவளை, சண்பகம், பாரிசாதம், விச்சி, விறலி, நாகணவாய்ப்புள், நாரை, புறவு, பொன், புகையிலை, தமிழ் போன்றவற்றையும் தூதாக அனுப்பியமையை அறிய முடிகிறது.

**தேவாரங்களில் தூது**

சம்பந்தரின் அகத்துறைச் செய்யுட்களின் திருத்தோணிபுரத் திருப்பதிகமும் திருச்செங் காட்டங்குடித் திருப்பதிகமும் அப்பரின் அகத் துறைச் செய்யுட்களில் திருப்பழனத் திருப்பதிகமும் திருமருகற் திருப்பதிக நான்காம் பாடலும் சுந்தரரின் அகத் துறைச் செய்யுட்களில் திருவாரூர்த் திருப்பதிகமும் தூதுச் செய்யுட்களாக அமைந்துள்ளன. அப்பர் தேவாரத்தில் திருப்புறம்பயம் எனும் திருத்தாண்டகம் தலைவனுக்குத் தூதுவிட எண்ணிய தலைவி தன் தோழிக்குக் கூறுவதாய் அமைந்துள்ளதும் சுட்டத்தக்கது.

இச்செய்யுட்களுள் பூவைகள், வண்டுகள், குருகுகள், கிளிகள், பேடைகள், சேவல்கள், குயில், நாரை, நெய்தல், தென்றல், புறாக்கள், நாகணவாய்ப்புட்கள், அன்றில், தாரா போன்ற அஃறிணைகள் தூதனுப்பப்படுகின்றன.

**தேவாரத் தூதுப் பாடல்களில் இறையான்ம உறவு**

உலகியலின் பாற்பட்ட அகக் கருத்துக்கள் தேவாரத் தூதுப் பாடல்களில் தெய்வீகக் காதலாக மிளிர்கின்றன என ஏலவே குறிப்பிட்டோம். அகம் சார்ந்த இன்ப துன்ப வுணர்வுகளை ஒருவனோ ஒருத்தியோ தம் தூதுப் பொருளிடம் கூறி நிற்றல் தம்முள்ளத்தை தாமே ஆற்றுப்படுத்தும் நிலையாகக் காணப்படுகின்றது. இதனை விரித்துரைக்கின் தம் உள்ளத்தே எழுகின்ற நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனும் எட்டும் வெளிப்பட்டு விளங்க மனவறிவு, பொறியறிவு ஆகிய இரண்டையும் வேறுபடுத்தி அஃறிணையில் ஒன்றையோ பலவற்றையோ விளித்துத் தம் நோயும் இன்பமும் புலப்படப் பேசுவர். அவ்வஃறிணைப் பொருள் ஒட்டிய உறுப்புடையது போல், உணர்வுடையது போல், மறுப்பதுரைப்பது போல் தம் நெஞ் சோடு பேசுவதும் உண்டு.[14]

இறைவன் அநாதிப் பொருள் என்பது போல ஆன்மாவும் அநாதிப் பொருள் இவையிரண்டும் அறிவுடைப் பொருள்களாயினும் இறைவன் பேரறிவன் - முற்றறிவினன் ஆன்மா குறை யறிவு டையதாகும். ஆன்மா அறிவிக்க அறிவது

- உணர்த்த உணர்வது. சைவ சித்தாந்தம் இறையான்ம உறவை தெய்வீகக் காதலூடு விளக்கி நிற்பது யாவரும் அறிந்ததே. தேவார முதலிகள் இறையான்ம உறவு நிலை பற்றிய கருத்தாடலைத் தூது விடும் அஃறிணைப் பொருட்களில் இருந்து ஆரம்பிக்கின்றனர்.

தாமரை மலரில் தேனினை உண்டு பெடையினோடு ஒண்டரங்க இசைபாடும் அளியரசே[15] என்கின்றார் ஞானசம்பந்தர். தான் சொல்லும் செயலையாற்ற வண்டினை 'அளியரசே' என விளிக்கின்றார். தேனினை உண்டு பெடையோடு இணைந்து இன்புற்றிருக்கும் வண்டு பிரிவுத்துன்பம் பற்றியறியாது. அவ்வண்டினை அழைத்து அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதுவே ஆன்மாவின் நிலை. வண்டு தேனுண்டு களித்திருக்கும் தன்மையிலும் - பெடையோடு கூடிக் களித்திருப்பதனாலும் உண்மையை உணரா; உணர்த்தவே உணரும், தத்தம் கடமையை அவை செய்ய வேண்டும் என உணர்த்துகின்றாள் தலைவி.[16] இவ்வாறு தன்னிணையுடன் கூடி மாயா பந்தத்திலுள் கட்டுண்டு கிடக்கும் சகல நிலையில் ஆன்மா, உணர்த்த உணர்தலின் உலகியல் நிலை விடுத்து ஆன்மீக நிலையை அடையப்பெறும். மாயா மலத்துள் ஆன்மா அகப்பட்டிருத்தலை வண்டு மது அருந்திய நிலைக்கு ஒப்பாகச் சுட்டுவர். தூதுப் பொருட்களை அழைக்க முற்பட்ட தேவார முதலிகள் மூவரும் அவற்றைப் புகழ்ந்து உரைத்துள்ளமை அவதானிக்கத்தக்கது.

"வண்டரங்கப் புனற்கமல மது மாந்திப்
பெடையினோடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே"[17]

"முன்றில் வாய் மடற் பெண்ணைக் குரம்பை வாழ்
முயங்குசிறை அன்றில்காள்"[18]

எனச் சம்பந்தரும்

"தேன் நலங் கொண்ட தேன் வண்டுகள்
கூடும் அன்னப் பெடைகள்"[19]

எனச் சுந்தரும்

"துணையார முயங்கிப்போந்த துறை
சேரி மடநாராய்"[20]

என அப்பரும் பாடி நிற்பதனைச் சுட்டலாம்.

இறைவனை, இறையடியவரை வணங்கிப் பணி செய்தற்கும் இறையருள் வேண்டும். இறைவன் மீது தீராக்காதல் கொண்ட ஆன்மா, சிற்றறிவு கொண்ட பிற ஆன்மாக்களை இறை யேவலால் அழைத்து இறைபெருமை கூறி அவற்றை இறைவனிடம் ஆற்றுப்படுத்துந் திறன் இங்கு நோக்கத்தக்கது.

தம் இணைகளுடன் கூடி இன்புற்றிருக்கும் இவை தன் தாபத்தைப் புரிந்து கொள்ளும், தான் பிரிவுத் துயராற்படும் வேதனையை இணையுடன் கூடியிருந்தால் இவையுணரா எனப் பலவாறு எண்ணித் தன் தனிமையைத் துயரை, விரகதாபத்தைப் பல வழிகளிலும் தலைவி வெளிப்படுத்துவதாக இப்பதிகங்கள் அமைந்துள்ளன. அகத்துறையில் தலைவி கூற்று, செவிலி கூற்று, தலைவன் கூற்று, நற்றாய்கூற்று, தோழி கூற்றெனப் பாடல்கள் அமைவது வழக்காகும். இத்தூதுப் பதிகங்கள் தலைவியின் கூற்றுக்களாக மட்டும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தூது செல்லும் அஃறிணைப் பொருட்களை அவற்றின் சிறப்புக்கருதிப் பலவாறு அழைத்து, தலைவி – ஆன்மா தன்னிலையைத் தலைவனுக்கு - இறைவனுக்கு உணர்த்துமாறு பல உணர்வு வெளிப்பாட்டுக்களினூடாக வேண்டி நிற்பதை அவதானிக்கலாம். அந்நிலையை பின்வருமாறு நோக்கலாம்.

1. தன் துயரத்தை, மெய்வேறுபாட்டை உணர்த்தி அவனிடத்துத் தன் நிலையைத் தெரிவித்தல்.
2. தலைவனைத் தன்னிடத்தே ஒரு முறை வந்து போக உரைத்தல்.
3. தலைவன் திருப்பெயரைச் சொல்லுதலும் கேட்டலும்.

தலைவி தனக்கு காதற் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தை முதற்கண் கூறுகின்றாள்.

"என்நிலைமை பரிந்தொருகாற் பகராயே"

என்னிலையை நிகழ்த்தாயே"[21]

எனும் சம்பந்தரின் வரிகளாலும்

"முன்மாலை நகு திங்கள் முகில் விளங்கு முடிசென்னிப்

பொன்மாலை மார்பன் என் புதுநலமுண் டிகழ்வானோ"[22]

எனும் அப்பரின் வரிகளாலும் இதனை அறியலாம்.

இதன்வழி இறைவன் மீது காதல் வயப் பட்ட ஆன்மா பயலை எனும் பசலை நோய் பீடிக்கப்பட்டதாயிற்று. இறைவனைப் பிரிந்திருக்க முடியாது தவிக்கும் ஆன்மாவின் நிலையை உணர்த்தி நிற்கின்றன.

"என்பயலை வேதியர்க்கு விளம்பாயே"

"உறுபயலை – பண்பனுக்கென் பரிசுரைந்தாற் பழியாயே"

"என்கூர் பயலை கூற்றே"

"மெய்ப்பயலை விளம்பாயே"[23]

எனவரும் வரிகள் இதற்கு உதாரணங் களாகும்.

இத்தூதுப் பாடல்கள் கைக்கிளை வகையின வாகவே அதிகம் காணப்பட்டாலும் தன்னை ஆட்கொண்ட தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து போன - தன்னுடன் அழைத்துச் செல்லாத துயரத்தையே பதிவு செய்கின்றன. காணாதனவெல்லாம் காட்டி ஆன்மாக்களை ஆட்கொண்ட இறைவன் "பிரார்த்தகன்ம" அனுபவிப்புக்காக அவற்றை உலகினில் வாழவிடுவான். இறைவன் மீது தீராக்காதல் இருந்தும் அவன் தாள் சேர முடியா நிலையை எண்ணி ஆன்மா இரங்கி நிற்கும் நிலையே இத்தூதுப் பாடல்கள் பிரார்த்தகன்மமே இதற்குக் காரணம் என்பதனை "அருவினையேன்"[24], "கடுவினையேன்"[25], "உள்ளுவார் வினை தீர்க்கும் என்றுரைப்பார்"[26] எனப் பலவாறு எடுத்தாண்டுள்ளமையை அவதானிக்கலாம்.

இவ்வாறு தன்னைக் கையறு நிலையாக விட்டுச் சென்ற இறைவனை நினைத்து நினைத்து ஆன்மா மறுகுகிறது. மறக்கமுடியாமல் உறக்கமில்லாமல் அத்தன் ஆரூரனை, பருகுமாறும் பணிந்தேத்துமாறும் அவனை நினைத்து கசிந்துருகுமாறும் தவிக்கிறது. என்னைத் தன்னுடன் அழைத்துச் செல்லாது அக்கிரமங்கள் செய்கிறான் ஈசன் இப்பிரிவால் கை வளையல்கள் தாமாகவே கைகளில் நின்றும் கழன்று விழுகின்றன. கால்களோ சோர்கின்றன. கையிலுள்ள கனவளைகளோ கழல்கின்றன. முலைகளோ பீர் கொள்கின்றன. பால்நலம் உடைய இப்பணை முலைகள் பசலை படர்ந்து கிடக்கின்றன. கண்டவாறு காமத்தீ கனன்று எரிந்து என் மெய்யை உண்கிறது. நானோ உன்னைப் பரவியும் உருகியும் அடைய எண்ணுகிறேன். ஆனால் நீயோ என்னைச் சற்றேனும் திரும்பிப் பார்க்கிறாய் இல்லையென ஆன்மா தவிக்கிறது.[27] இவ்வாறு ஆன்மா இறைவன் மீது தீராக்காதல் கொள்ளினும் பிரார்த்த கன்மம் முடிவுறாமல் உரிய பக்குவத்தை அடையாமல் மலபரிபாக, இருவினையொப்பு எய்தும் நிலைபெறினும் சத்திநிபாதம் சித்திக்காததாய் இருத்தலை இது புலப்படுத்துகிறது.

இவ்வாறு பிரிவுத் துயரால் பசலை படர்ந்து, தன்னாமம் கெட்டு, மெய்யுணர் வழியும் நிலையில் உள்ள என்னைத் தலைவன் ஒருமுறையேனும் வந்து பார்த்துச் செல்ல வேண்டுமென ஆசைப்படுதலைக் கூறுகிறாள் தலைவி. அத்தோடு அவனை நினைத்துப் பலவாறு போற்றுகிறாள். என் தலைவன் சாதாரணன் அல்லன் அவன் மேலான பதியாவான் பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்[28] கைம்மாவுரி

தலைவி தனக்கு காதற் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தை முதற்கண் கூறுகின்றாள்.

"என்நிலைமை பரிந்தொருகாற் பகராயே"

என்னிலையை நிகழ்த்தாயே"[21]

எனும் சம்பந்தரின் வரிகளாலும்

"முன்மாலை நகு திங்கள் முகில் விளங்கு முடிசென்னிப்

பொன்மாலை மார்பன் என் புதுநலமுண் டிகழ்வானோ"[22]

எனும் அப்பரின் வரிகளாலும் இதனை அறியலாம்.

இதன்வழி இறைவன் மீது காதல் வயப் பட்ட ஆன்மா பயலை எனும் பசலை நோய் பீடிக்கப்பட்டதாயிற்று. இறைவனைப் பிரிந்திருக்க முடியாது தவிக்கும் ஆன்மாவின் நிலையை உணர்த்தி நிற்கின்றன.

"என்பயலை வேதியர்க்கு விளம்பாயே"

"உறுபயலை - பண்பனுக்கென் பரிசுரைந்தாற் பழியாயே"

"என்கூர் பயலை கூற்றே"

"மெய்ப்பயலை விளம்பாயே"[23]

எனவரும் வரிகள் இதற்கு உதாரணங் களாகும்.

இத்தூதுப் பாடல்கள் கைக்கிளை வகையின வாகவே அதிகம் காணப்பட்டாலும் தன்னை ஆட்கொண்ட தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து போன - தன்னுடன் அழைத்துச் செல்லாத துயரத்தையே பதிவு செய்கின்றன. காணாதனவெல்லாம் காட்டி ஆன்மாக்களை ஆட்கொண்ட இறைவன் "பிரார்த்தகன்ம" அனுபவிப்புக்காக அவற்றை உலகினில் வாழவிடுவான். இறைவன் மீது தீராக்காதல் இருந்தும் அவன் தாள் சேர முடியா நிலையை எண்ணி ஆன்மா இரங்கி நிற்கும் நிலையே இத்தூதுப் பாடல்கள் பிரார்த்தகன்மமே இதற்குக் காரணம் என்பதனை "அருவினையேன்"[24], "கடுவினையேன்"[25], "உள்ளுவார் வினை தீர்க்கும் என்றுரைப்பார்"[26] எனப் பலவாறு எடுத்தாண்டுள்ளமையை அவதானிக்கலாம்.

இவ்வாறு தன்னைக் கையறு நிலையாக விட்டுச் சென்ற இறைவனை நினைத்து நினைத்து ஆன்மா மறுகுகிறது. மறக்கமுடியாமல் உறக்கமில்லாமல் அத்தன் ஆரூரனை, பருகுமாறும் பணிந்தேத்துமாறும் அவனை நினைத்து கசிந்துருகுமாறும் தவிக்கிறது. என்னைத் தன்னுடன் அழைத்துச் செல்லாது அக்கிரமங்கள் செய்கிறான் ஈசன் இப்பிரிவால் கை வளையல்கள் தாமாகவே கைகளில் நின்றும் கழன்று விழுகின்றன. கால்களோ சோர்கின்றன. கையிலுள்ள கனவளைகளோ கழல்கின்றன. முலைகளோ பீர் கொள்கின்றன. பால்நலம் உடைய இப்பணை முலைகள் பசலை படர்ந்து கிடக்கின்றன. கண்டவாறு காமத்தீ கனன்று எரிந்து என் மெய்யை உண்கிறது. நானோ உன்னைப் பரவியும் உருகியும் அடைய எண்ணுகிறேன். ஆனால் நீயோ என்னைச் சற்றேனும் திரும்பிப் பார்க்கிறாய் இல்லையென ஆன்மா தவிக்கிறது.[27] இவ்வாறு ஆன்மா இறைவன் மீது தீராக்காதல் கொள்ளினும் பிரார்த்த கன்மம் முடிவுறாமல் உரிய பக்குவத்தை அடையாமல் மலபரிபாக, இருவினையொப்பு எய்தும் நிலைபெறினும் சத்திநிபாதம் சித்திக்காததாய் இருத்தலை இது புலப்படுத்துகிறது.

இவ்வாறு பிரிவுத் துயரால் பசலை படர்ந்து, தன்னாமம் கெட்டு, மெய்யுணர் வழியும் நிலையில் உள்ள என்னைத் தலைவன் ஒருமுறையேனும் வந்து பார்த்துச் செல்ல வேண்டுமென ஆசைப்படுதலைக் கூறுகிறாள் தலைவி. அத்தோடு அவனை நினைத்துப் பலவாறு போற்றுகிறாள். என் தலைவன் சாதாரணன் அல்லன் அவன் மேலான பதியாவான் பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்[28] கைம்மாவுரி

போர்த்தான்[29] பதியாவது இதுவென்று பலர்பாடும் பழனத்தான் மதிகங்கை சூடி யவன்[30] முன்மாலை நகுதிங்கள் முகில் விளக்கு முடிசென்னியன்[31] அலைகொள் சூலப்படை அடிகளார்[32] ஒளிமதியத் துண்டரங்கப் பூண்மார்பர்[33] புரிசடையெங் கார்மிகுந்த கறைக்கண்டத் திறையவன்[34] எனப் பலவாறு வர்ணித்து ஆன்மா இன்புறுகிறது. இத்தோற்றத்தை எண்ணி எண்ணி ஆன்மா தனது கரணங்கள் பொறி புலன்களை பூரண இறை சிந்தனைக்குரியதாக்குகிறது. மேலும் அவனது நாமங்கேட்டல் ஆன்மாவிற்குப் பேரின்பத்தை நல்குகிறது. சம்பந்தரின் "இளம்பிறையாளன்திருநாமம்எனக்கொருகாற் பேசாயே"[35] எனக் கிளியிடம் வேண்டும் வரி இறைநாமம் செப்புதலின் சிறப்பைத் தெளிவுறுத்துகிறது.

இவ்வாறு இன்புறும் நிலையும் பின் தலை வன் தன்னை மறந்து கைவிட்டு விடுவானோ என்ற ஏக்கமும் ஏற்பட ஆன்மா பலவாறு எண்ணிப் பிதற்றுதலையும் இப்பாடல்கள் பதிவு செய்கின்றன. பொன்மாலை அணிந்த மார்பன், என் புதுநலம் உண்டு இகழ்வானோ, என்னை ஆட்கொண்ட அந்த இனிய நாளை மறந்து விடுவானோ, என் காதலூ டாக எனது உயிர் மீது திருவிளையாடல்கள் புரிகின்றானோ, கண் பொருந்தும் போதத்து அவனால் கைவிடப் படுவனோ, மணம் புரிய மறுப்பானோ, வஞ்சித்து என் வளை கவர்ந்த அவன் வாரானேயாயினும் அவன் காதலை எண்ணித் துன்பம் நீங்கி வாழ்வேன் என மறுகிக் காதலுறுதி பூண்டு நிற்கும் தன்மை எடுத்தாளப்படுகின்றது. அதே வேளை அவன் வராது விடினும் அவனை நினைவுறுத்தும் வகையில் "அவன் மார்பில் அணிந்திருக்கும் மணம் வீசும் கொன்றை மாலையையாவது வாங்கி வரமாட்டாயா?[36] என ஏங்கி நிற்கிறது ஆன்மா. அது மட்டுமல்லாது என் தலைவன் உள்ளுவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிந்து அவர் தம் குறை நீங்கும் இயல்பினன் என உலகோர் போற்றிப் பரவுகின்றனர். ஆனால் எனக்கு ஏற்பட்ட இத்துயரத்தை நீக்காது பிரிவில் நின்று என் கைவளையல்களை அல்லவா கவர்ந்து விட்டான். பொங்கோத மால்கடலின் புறம்புறம் எல்லாம் சென்று இரை தேர்கின்ற சிவந்த கால்களை யுடைய வெண்ணிற நாரையே என்ன செய்வதென் றறியாது திகைக்கும் எனக்கு தூது சென்று என்னிலை இறைவற்குத் தெரிவிப்பாயாக[37] என ஏங்கி நிற்கும் நிலை முக்திக்கு அவாவி நிற்கும் ஆத்மனின் நிலையைத் தெளிவுறுத்துகிறது.

பற்றுமற்றின்மை, பாடுமற்றின்மை, உற்று மற்றின்மை நிற்கும் ஆத்மன், பாடுமாறும் பணிந்து ஏத்துமாறும் ஊடிக் கூடுமாறும் இரங்கி நிற்கிறது் இறைவனை நித்தமாக நினைத்து, உள்ளம் ஏத்தித்தொழும் அத்தன் என எண்ணியுருகிக் கசிந்து நிற்கிறது்[38] கொல்ல வந்த யானையை உரித்து ஆடையாக அணிந்தவன்,[39] மதியாதார் வேள்விதனை மதித்திட்டவன் மதி, கங்கை என்பவற்றை அருள் கூர்ந்து தன் அணிகலன்கள் ஆக்கியவன்[40], இரு விசும்பின் கடி அரணம் பொடி செய்த இணையார மார்பன்[41], மலைமகள் கோன்[42] இவ்வாறாய் யாவர் அன்புக்கும் கட்டுண்டு அருள் செய்த பேராளன், என்னை மட்டும் கைவிட்டானே என்னுயிர் மேல் விளையாடுதல், ஏங்க விடுதல், எத்தனை தூரம் சரியானது என வினவிக் கலங்கி நிற்குந் திறன் பக்குவமுற்ற ஆன்மா இறைவனோடு இணையத் தவிக்கும் தவிப்பின் குரலாய் அமைகின்றது.

சைவசித்தாந்தம் கூறும் முக்தி என்பது ஆன்மா மலவாசனையினின்று விடுபட்டு இறைவனை அடைதலாகும். தனது உண் மைத் தலைவனை - இறைவனை யாரென சிவஞானத்தால் இருவினையொப்பும் மலபரி பாகமும் வந்துற்ற நிலையில் உணரும். மல வாசனை நீங்கி உப்பு நீருடன் நன்னீர்

கலந்து இரண்டற்ற நிலையை அடைவதை ஒத்ததாய் பேரானந்தத்தை அடையப்பெறும். அந்நிலையில் பரிபூரணனான சிவனைப் பொருந்துதலோடு அச்சிவமாகவே ஆன்மா நிற்றலே முக்தி என்பர்.[43]

சதசத்தான ஆன்மா,[44] சார்ந்ததன் வண்ணமாவது, தனது தலைவன் - அறிவுப் பொருள் - பதி என அதன் பாற்பட்டதன் வழி அறிகிறது, மலப் பீடிப்புக்குள்ளானஆன்மா மாயாகாரியப் பிணிப்பை கைவிளக்காய்க் கொண்டு[45] விடிவாமளவும் காத்திருக்கும்[46] தன்னிலை உணரவுணர பாசஞானத்தின்னின்றும் பசுஞானமடைந்து பதிஞானத்தை எய்தப் பெறும். ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்ப இறைவன் காணாதனவெல்லாம் காட்டி ஆட்கொண்டு அருளுவான் என்பர். ஆட்கொள்ளப்பட்ட ஆன்மா பிரார்த்த கன்ம நீக்கத்திற்காய் உலகில் உழலும். அவ்வாறு உழலும் ஆன்மாவின் குரலாகவே தேவார முதலிகளின் தூதுப் பாடல்கள் அமைந்துள்ளன. இவை துன்பம் துளியுமிலா பேரின்ப நிலையையடைய அவாவி நிற்கும் ஆன்மாவின் குரலாகின்றது. அதனை மானிடக்காதலின் வழி காதல், பிரிவு, ஏக்கம், மெலிதல், பசலை படர்தல், பிறவுயிர்கள் இணையுடன் இருத்தலைக் கண்டு ஏற்படும் பரிதவிப்பு, தலைவனை அடையத் துடித்தல், அவனது ஒரு பொருளையாவது வைத்திருக்க எண்ணும் மனவுளைச்சல், தீராக் காதல் என்பவற்றையும் காதல் வயப்பட்ட தலைவி, தலைவனின் அழகு, தோற்றம், பண்பு என்பவற்றை எண்ணியும் கூறியும் இன்புறலும் அதன்வழி தன் துயரை அறிவிக்க அஃறிணைப் பொருட்களைத் தூதாக விட எண்ணி அவற்றைப் பலவாறு புகழ்ந்தும், கெஞ்சியும், அவையிணையுடன் இருத்தலைக் குறிப்பாலுணர்த்தியும் தன் தனிமையைப் போக்கித் தலைவனிடம் தன் காதலை உரைக்க வேண்டுதலும் எனத் தமிழ் அகத்துறைப் பண்பை தெய்வீகப் பண்பாக உரைத்து நிற்கும் திறன் நயக்கத்தக்கதாகும்.

**முடிவுரை**

அவைதீக மதங்கள் செல்வாக்குற்றுத் துறவும், சூனியமும் பெண்கள் மாயப்பிசாசுகள் எனும் கருத்தியலும் முதன்மை பெற்றிருந்த சூழலில் தமிழக மக்களுக்கு புத்துணர்வு அளித்து அவர்தம் வாழ்வியலில் இறைவன் எனும் பற்றுக்கோட்டை முன்னிறுத்தியவர்கள் தேவார முதலிகளாவர். அவர்கள் சாதாரண, ஒழுக்கம் சார்ந்த உலக வாழ்வும், காதலும், இல்லறமும், இறைசிந்தையும் ஆன்மாவிற்கு விடுதலையை–முக்திப் பேற்றை அளிக்கவல்லன எனச் சமய தத்துவத்தளங்களில் நின்று எடுத்துரைத்தனர். இறைவனின் பெண்ணில் நல்லாளொடு இணைந்திருக்கும் தன்மையைக் காட்சிப்படுத்தினர். மானிடக் காதலின் வழி இறையான்ம பக்தி தெளிவுறுத்தப்பட்டது. அதற்குச் சிறந்த உபாயமாகப் பயன்பட்ட வடிவமே தூதிலக்கிய வடிவமாகும். இவ்வடிவத்தினூடு இறைவன் மீது தீராபக்தி உடைய ஆன்மா அவனையடையத் துடிக்கும் - தவிக்கும் தன்மையை மானிடக் காதலின் வழியும் எல்லாவுயிர்களும் இணையுடன் இருத்தலின் வழி ஆன்மாவின் உண்மைக் காதலன்இறைவன்என்பதையும்உய்த்துணர்த்த இவ்வடிவத்தின் வழி முயன்றனர்.

ஆக, இத்தூதிலக்கிய அகவடிவம் மானிடக்காதலின் வழி ஆன்மா இறைவனைப் பற்றுதலே அதன் உய்வுக்கான வழி என்பதைத் தெளிவுபடுத்துகிறது. யாவையும் மறந்து இறைவன்ஒருவனேதனது இலக்கு எனவுணர்ந்த பேரன்பால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மாவின் குரலாக, இத்தேவார தூதுப்பாடல்கள் சைவசித்தாந்த இறையான்ம தொடர்பு பற்றிய கருத்தியலை இலக்கிய நயத்துடன் எடுத்தியம்பி நிற்கின்றன.

**அடிக்குறிப்பு**

1. வரதாசன்,மு., *(2000)*, **தமிழ் இலக்கிய வரலாறு,** சாகித்திய அக்கடமி புதுடில்லி, பக். *27– 64.*
2. மாணிக்கம்,வ.சு.ப., *(1974)*, **தமிழ்க் காதல்,** பாரி பண்ணை தமிழ்நாடு, ப.*469.*
3. **தொல்.பொருள்,** நச்சினாக்கினியார், அகம். கு *.1.*
4. அறிவுடைநம்பி,ம.சா., *(1986)*, **திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்,** கருமணி பதிப்பகம், மதுரை, ப.*89.*
5. வரதராசன், மு., *(2000)*, மு.கு.நூ., பக்.*29 - 30.*
6. Vijayalaxmy, (1987), The Religion and philosophy of Tevaram, Voi – iv, p. 1245.
7. தொல்., பொருள், புறத்திணையியல், *28.*
8. திருஞானசம்பந்தர் தேவாரம், - *1:56, 60, 63, 73, 76, 254 256, 303 321, 353, 359, 362, 374.* தனிப் பாடல் *242 -7.*
9. திருநாவுக்கரசர் தேவாரம் - *4.81.6, 5.7.7-8,5.15.5-6,5.18.1,5.23.2-5,5.25.5- 8,5.26.1-5,5.39.1-2,5.64.4, 5.66.9, 5.78.4, 5.81.3, 5.88, 4- 9, 6.2.9, 6.25.*
10. திருப்பைஞ்ஞீலித் திருப்பதிகம், திரு வாரூர்த் திருப்பதிகம் திருவொற்றியூர்த் திருப்பதிகம் -பா.*4 91 -4.*
11. தொல்., *1152.*
12. நன்னூல், *506.*
13. **சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்** , *(1960)*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ப. *393.*
14. **தொல்.,** பொருளதிகாரம் **,** பொருளியல் - *2.*
15. **திருஞானசம்பந்தர் தேவாரம்,** *1:60:1.*
16. மேலது.
17. மேலது.
18. மேலது, *1:60.7.*
19. **சுந்தரர் தேவாரம்,** *7:32:7,10.*
20. **திருநாவுக்கரசர் தேவாரம்,** *4:12:8.*
21. **திருஞானசம்பந்தர் தேவாரம்,** *1:1:7.*
22. **திருநாவுக்கரசர் தேவாரம்,** *4:12: 4.*
23. **திருஞானசம்பந்தர் தேவாரம்,** *1:60:1.10.*
24. மேலது, *1:60:2.*
25. மேலது, *1:60:3.*
26. **திருநாவுக்கரசர் தேவாரம்,** *4:12:09.*
27. **சுந்தரர் தேவாரம்,** *07:37:10.*
28. **திருநாவுக்கரசர் தேவாரம்,** *4:12:2.*
29. மேலது, *4:12:3.*
30. மேலது.
31. மேலது, *4:12:01.*

32. **சுந்தரர் தேவாரம்,** *7:37:5.*

33. **திருஞானசம்பந்தர் தேவாரம்,** *1:60:01.*

34. *மேலது.*

35. *மேலது, 1:60:10.*

36. **திருநாவுக்கரசர் தேவாரம்,** *4:26:6.*

37. *மேலது.*

38. **சுந்தரர் தேவாரம்,** *7:37:11.*

39. **திருநாவுக்கரசர் தேவாரம்,** *4:26:3.*

40. *மேலது, 4:26:4.*

41. *மேலது, 4:26:7.*

42. *மேலது, 4:26:8.*

43. **சிவநெறிப்பிரகாசம்,** *பா.208.*

44. **திருவருட்பயன்,** *குறள், 2 -7.*

45. **சிவஞானபோதம்,** *4:2.*

46. **திருவருட்பயன்,** *குறள் 3:1.*